

இலக்கியம் ஒரு நுண்கலை; அதனை நுட்பமாகத் திறனாய்வு செய்ய வேண்டும் என்று இலக்கியத்தையும் திறனாய்வையும் இயைபுறுத்திக் காட்டி, ஒப்பிலக்கியப் பேழையின் திறவுகோல் திறனாய்வுக் கல்வி அல்லது திறனாய்வியல் என்ற உண்மையையும் உணர்த்துகின்றது இந்நூல். இலக்கிய நுட்பங்களைப் புரிந்து கொள்ளவும், ஒப்பாய்வு முறை என்ற கிளைவளர்வதற்கும் திறனாய்வு வகைகள் துணை நிற்கின்றன எனவும் ஆராய்ச்சி முறையினை அடுத்த கட்டத்திற்கு எடுத்துச் செல்லும் ஆற்றல் திறனாய்வு வகைமையிலிருந்து கிடைக்கின்றது எனவும் தேர்வுக் கண்ணோட்டத்தோடு மட்டும் அமையாமல் ஆய்வுநெறி முறைக்கு உரிய ஒரு கையேடாகவும் ஆய்வுலகில் காலெடுத்து வைக்க விழையும் மாணவச் செல்வங்களுக்குத் தேர்ந்த வழிகாட்டியாகவும் விளங்குகிறது இந்நூல்.

- பேரா. முனைவர் இ.கி.இராமசாமி

மீனாட்சி பதிப்பகம்
2/304, இராதாகிருஷ்ணன் தெரு,
நாராயணபுரம், மதுரை - 625 014.

9 788190 770682

இலக்கியத் திறனாய்வியல் - அன்றும் இன்றும்

உ.கருப்பத்தேவன்

# இலக்கியத் திறனாய்வியல் - அன்றும் இன்றும்



முனைவர் உ.கருப்பத்தேவன்

# இலக்கியத் திறனாய்வியல் - அன்றும் இன்றும்
## (Literary Criticism Past and Present)

முனைவர் உ.கருப்பத்தேவன்

முதல்பதிப்பு : டிசம்பர் 2017 •
பக்கம்: 160 • அளவு: 1x8 டெம்மி
கணினி: பி.கி.ராம்குமார்
அச்சு: ஜெயஸ்ரீ கிராபிக்ஸ் & ஆப்செட் பிரிண்டர்ஸ், மதுரை.

ISBN: 978-81-907706-8-2

வெளியீடு:
மீனாட்சி பதிப்பகம்
2/304, இராதாகிருஷ்ணன் தெரு, நாராயணபுரம்,
மதுரை - 625 014.

விலை: ரூ. 120.00



# அணிந்துரை

பேரா.முனைவர் இ.கி.இராமசாமி
மேனாள் தமிழ்த்துறைத் தலைவர்
தமிழ் உயராய்வு மையம்,
யாதவர் இருபாலர் கல்லூரி,
மதுரை - 14

தேனீயைப்போலத் தகவல் திரட்டுதல், பட்டாம்பூச்சியைப் போல உற்சாகமாக இருத்தல், பலநாள் முயன்று சிலை வடிக்கும் திறம் வாய்ந்த சிற்பியைப்போல நுட்பங்காணுதல், பல்துறை ஞானத்தையும் தேடுதல், தமிழாய்வுக் கருத்தரங்குகளை முன்னின்று நடத்துதல், அவற்றில் பங்குபெறுதல், பயின்றதையும் கேட்டதையும் கிடைத்ததையும் எடுத்துத் தற்சிந்தனையோடு நூலாக்கம் செய்தல், புதியவற்றையும் நல்லனவற்றையும் எங்கிருந்தாலும் கொணர்ந்து சேர்த்தல்; மார்க்சியம் காந்தியம் பெரியாரியம் தலித்தியம் பெண்ணியம் இந்திய தேசியம் தமிழ்த் தேசியம் போன்ற கோட்பாடுகளை நன்கு புரிந்து கொள்ளுதல், இலக்கிய இயக்கங்களைக் கற்று உரையாடுதல், மதுரை காமராசர் பல்கலைக்கழக ஒப்பிலக்கியத் துறையினை உயிரோட்டமாக இயங்க வைத்தல், ஒப்பிலக்கியத் துறையின் முன்னோடிகளின் உயரத்திற்குத் தம்மையும் உயர்த்திக்கொள்ள முனைதல், நட்பு வட்டத்தை விரிவாக்கிக் கொள்ளுதல், முன்னைப் பேராசிரியர்களின் தகுதிப்பாடுகளை நெஞ்சில் நிறுத்திச் செயற்படுதல், குணம் நாடி குற்றமும் நாடித் திறனாய்வு செய்தல் போன்ற பண்புகளைக் கொண்ட பேராசிரியர் உகருப்பத்தேவன் அவர்களின் இலக்கியத் திறனாய்வியல் அன்றும் இன்றும் என்ற நூலுக்கு அணிந்துரை வழங்கும் வாய்ப்பு நான் பெற்ற பேறாகும்.

வளரும் பயிருக்கு உரம்போல வளரும் ஆராய்ச்சியாளருக்குப் பாராட்டு உரமாகும். அதுதான் தமிழியல் ஆராய்ச்சியின் வளர்ச்சிக்கு உதவுகின்ற உளவியல் அணுகுமுறை. இலக்கியத்தையும் திறனாய்வையும் கற்றல், கற்பித்தல், வினாவுதல், புரியவைத்தல், ஆராய்ச்சிப் பாதையில் மாணவர்களை அழைத்துப்போதல் என்ற நோக்குநிலையில் இந்த நூலின் அறிமுகப்பகுதி விளங்குகின்றது. திறனாய்வுக் கல்வி என்ற நறுந்தொடர் புது உண்மைகளை உள்ளடக்கியது. கலை இலக்கியத்தின் பண்பு, நோக்கம், அமைப்பு